# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029138

1. District : Coimbatore PS: Vigilance and Anti Corruption Coimbatore Year: 2018 FIR No.: 4/2018/AC/CB. Date: 16.05.2018 at 16.30hrs
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்
2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : Date from : 02.05.18 Date to : 16.05.2018
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 1400hrs Time to : 1109 hrs to 1134 hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 15.05.2018 Time : 14.00hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 15.05.2018 Time : 14.00hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்
4. Type of Information : Written/ Oral : Tamil typed (Computer)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 30 kms south east
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address : Sulur Taluk office, Survey section, Coimbatore.
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : V. MANDIRAMOORTHY (b) Father's/ Husband's Name : Velusamy
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 43/18 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Petrol Bunk Manager (g) Address : 3/163, Chinnamalai, Sencherimalai, malaiyadipalayam (Post), Sulur taluk, Coimbatore. 641669
   தொழில் முகவரி
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   T. Kathiresan, Surveyor, Sulur Taluk office, Coimbatore.
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [signature] 16/5/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Inspector of Police
Vigilance and Anti Corruption Cbe.
Name: பெயர் P. PARIMALA DEVI
Rank: நிலை INSPECTOR No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.05.2018 - 1830 hrs

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: கணம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு கோவை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.-4/2018/AC/CB வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் இணைப்பு :-**

ப.பரிமளாதேவி, காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு கோவை ஆகிய நான் கடந்த 15.05.2018-ம் தேதி மதியம் 14.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்த போது கோவை மாவட்டம் சின்னமலை செஞ்சேரி மலை கதவு எண்.3/163, மலையடிபாளையம் போஸ்ட் ஊரைச் சேர்ந்த திரு.வேலுச்சாமி என்பவர் மகன் V.மந்திரமூர்த்தி என்பவர் கோவை ஊ.த.க.பிரிவு அலுவலகத்திற்கு வந்து ஒரு தமிழ் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை கொடுத்தார். மேற்கண்ட புகாரினை பெற்று முதல்நிலை விசாரணை செய்ய இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை அவர்களுக்கு உடனே அனுப்பி வைக்கப்பட்டது. அன்றைய தினம் தலைமையகத்திலிருந்து கிடைத்த உத்தரவின் பேரில் மாலை 17.30 மணிக்கு பூர்வாங்க விசாரணை எண் PE 139/2018/REV/CB ஆக பதிவு செய்தேன். பின்பு வாதியை எதிரி திரு.கதிரேசன் லஞ்சம் கேட்டதை குரல் பதிவு செய்ய வேண்டும் எனவும் அது சம்மந்தமாக 16.05.2018-ம் காலை சுமார் 09.30 மணிக்கு கோவை ஊ.த.க.பிரிவு அலுவலகத்திற்கு ஆஜராகும்படி அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி 16.05.2018-ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு ஊ.த.க.பிரிவு அலுவலகத்திற்கு ஆஜரானார். பின்பு அவரிடம் நிலஅளவையர் திரு.கதிரேசன் என்பவர் லஞ்சம் கேட்பதை உறுதி செய்ய தலைமை காவலர் திரு.ஹரிஹரன் என்பவரிடம் குரல் பதிவு கருவியை கொடுத்து வாதி திரு.மந்திரமூர்த்தியுடன் சூலூர் தாலுக்கா அலுவலகம் சென்று நிலஅளவையர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நிலஅளவையர் திரு.கதிரேசன் அவர்கள் லஞ்சம் கேட்பதை குரல் பதிவு செய்ய அறிவுரைகள் கூறி அனுப்பப்பட்டது. அதன்படி தலைமை காவலர் வாதியை சூலூர் தாலுக்க அலுவலகம் வெளியே சுமார் 100 மீட்டர் தொலைவில் சுமார் 11.02 மணிக்கு குரல் பதிவு கருவியை ஆன் செய்து வாதியின் சட்டை பாக்கெட்டில் போட்டு நிலஅளவையர் கதிரேசன் அவர்களை போய் பார்க்க சொல்லி அனுப்பியுள்ளார். வாதி திரு.மந்திரமூர்த்தி சூலூர் தாலுக்கா அலுவலகத்தில் வைத்து பேசியுள்ளார். பின்னர் வாதி திரும்ப தலைமை காவலர் இருந்த இடத்திற்கு சுமார் 11.34 மணிக்கு வந்ததும் குரல் பதிவு கருவியை கொடுத்துள்ளார். தலைமை காவலர் திரு.ஹரிஹரன் அங்கேயே குரல் பதிவு கருவியை ஆப் செய்து விட்டு வாதி திரு.மந்திரமூர்த்தியை அழைத்து கொண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தும் ஆய்வாளரிடம் குரல் பதிவு கருவியை ஒப்படைத்தார். வாதிக்கும் நிலஅளவையர் திரு.கதிரேசன் என்பவருக்கும் நடந்த உரையாடலின் பதிவை குரல் பதிவு கருவியை வாதியின் முன்பு ஆன் செய்து கேட்கப்பட்ட போது கீழ் கண்ட விபரம் தெரியவருகிறது. அந்த குரல் பதிவில் வாதி தான் மேலும் எவ்வளவு தரவேண்டும் என்று கேட்டதற்கு எதிரி தான் ஏற்கனவே தொகை சொல்லி விட்டதாகவும், மீண்டும் மீண்டும் ஏன் கேட்கிறீர்கள் என்று சொன்னது பதிவாகி இருந்தது. மேலும் குரல் பதிவின் இறுதியில் எதிரி வாதியிடம் தான் 30000/- சொன்னதாகவும், அதற்கு வாதி தான் ஏற்கனவே ரூ.10,000/-

கொடுத்துள்ளதையும், மேலும் ரூ.10,000/-த்தோடு முடித்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு, அதற்கு எதிரி அது ஆகாது ராஜா என்றும், மீதி தொகை ரூ.20,000/- கேட்டதும், அதில் வேண்டுமானால் ஒன்றோ, இரண்டோ குறைத்துக் கொள்ளுமாறும் குரல் பதிவு கருவியில் பதிவாகியிருந்தது. மேற்கண்ட உரையாடலிருந்து திரு.கதிரேசன் லஞ்சமாக பணம் கேட்பது உறுதிசெய்யப்பட்டது. அதனடிப்படையில் தலைமையகத்தில் அனுமதி பெற்று இவ்வழக்கானது இன்று 16.05.2018-ம் தேதி மாலை 16.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகாரின் விபரம் பின் வருமாறு V.மந்திரமூர்த்தி, த/பெ.வேலுசாமி,3/163, சின்னமலை,செஞ்சேரி மலை, மலையடிபாளையம் போஸ்ட், சூலூர் தாலுக்கா, கோயம்புத்துார்-641669. பெறுநர் :-காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ஐயா, நான் கதவு எண்.3/163, சின்னமலை, செஞ்சேரிமலை, மலையடிபாளையம் போஸ்ட் சூலூர் தாலுக்காவில் எனது மனைவி ராஜேஸ்வரி மற்றும் மகளுடன் வசித்து வருகிறேன். நான் பி.காம் வரை படித்துள்ளேன். நான் செஞ்சேரிமலையில் உள்ள AE பெட்ரோ பிராடக்ஸ் என்ற பெட்ரோல் பங்கில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். எனது வீட்டில் அருகில் தான் எனது மாமனார் திருமலைசாமி கவுண்டர் மற்றும் மாமியார் முத்துலட்சுமியும் இருந்து வருகிறார்கள். எனது மாமனார் திருமலைசாமி கவுண்டர், அவரது அண்ணன் கிருஷ்ணசாமி கவுண்டர் மற்றும் மற்றொரு அண்ணன் நாச்சிமுத்துவின் மகன் பழனிசாமி என்பவர்களது பெயரில் மலைப்பாளையம் கிராமத்தில் சர்வே எண். 196ல் 2.8 ஹெக்டரும் அத்துடன் சர்வே எண். 206/1-ல் 0.48.50 ஹெக்டரும் கூட்டு பட்டவாக உள்ளது. மேற்படி விவசாய நிலத்தில் எனது மாமனார் திருமலைசாமிக்கு சர்வே எண்.196-ல் 1.44 ஏக்கரும் மற்றும் சர்வே எண்.206/1-ல் 36 செண்ட் நிலமும் பாத்தியப்பட்டதாகும். எனது மாமனார் திருமலைசாமி அவர்களது நிலத்தில் போர் போட்டிருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில் மலையடிபாளையம் மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று தட்கல் சர்வீஸ் பெற வேண்டி போய் கேட்டோம். அப்போது அங்குள்ள மின்சார வாரிய அலுவலர் எனது மாமனார் திருமலைசாமி அவர்களது பத்திரத்தை பார்வையிட்டு மேற்படி நிலமானது கூட்டு பட்டாவாக உள்ளது என்றும், சர்வீஸ் கனெக்சன் பெற தனிப்பட்டாவாக இருக்க வேண்டும் அல்லது கூட்டு பட்டாவில் உள்ள மற்ற நபர்களிடம் தடையில்லா சான்று பெற்று வர வேண்டும் என்று சொன்னார்கள். பின்னர் நானும் 2 நாள் கழித்து எனது மாமனார் திருமலைசாமிக்கு பாத்தியப்பட்ட இடமானது கூட்டு பட்டாவாக உள்ளதால் அவரது பெயரில் உள்ள நிலத்தை உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்ற வேண்டி நிலத்தை அளப்பது தொடர்பாக சூலூர் தாலுக்கா அலுவலகம் சென்று திரு.கதிரேசன் சர்வேயர் அவர்களை நேரில் சந்தித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் தனிப்பட்டா வேண்டும் என்றால் ஆன் லைனில் பதிவு செய்து விட்டு வாருங்கள் என்று சொன்னார். நானும் வந்து விட்டேன். பின்னர் 02.05.2018-ம் தேதி சுமார் 11 மணிக்கு எங்களது வீட்டிற்கு அருகில் உள்ள நகர கலந்தை கூட்டுறவு வங்கியில் சென்று நிலத்தை உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்வது தொடர்பாக விண்ணப்பம் பெற்றும் அதை பூர்த்தி செய்து ஆன்லைன்

மூலம் பதிவு செய்து அதன் நகல் பெற்றுக் கொண்டேன். பின்னர் மதியம் சுமார் 2 மணியளவில் சூலூர் தாலுக்கா அலுவலகம் சென்று சர்வேயர் திரு.கதிரேசன் அவர்களை பார்த்து விண்ணப்பம் மற்றும் ஆன் லைன் பதிவு செய்த நகல், பட்டா, வில்லங்க சான்றிதழ், பத்திரநகல், இடத்தின் வரைபடம் ஆகியவைற்றை விண்ணப்பத்துடன் இணைத்து கொடுத்தேன். அப்போது அவர் எனது விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டு என்னிடம் கையில் பணம் எவ்வளவு உள்ளது என்று கேட்டார். நான் ரூ.10,000/- கையில் உள்ளது என்று சொன்னேன். அவர் என்னை அழைத்து கொண்டு வெளியே வந்து அலுவலக வளாகத்திற்குள் இருந்த ஒரு புளியமரத்திற்கு அருகில் வைத்து என்னிடம் உள்ள பணம் ரூ.10,000/- கேட்டு வாங்கிக் கொண்டார். பின்னர் மேலும் நிலத்தை அளந்து பட்டா மாறுதல் பெற்று தர தனக்கு இன்னும் ரூ.15,000/- தர வேண்டும் என்று சொன்னார். நானும் பார்க்கலாம் என்று சொல்லி எனது வேலையை சீக்கிரம் முடித்து தருமாறு கேட்டேன். அவரும் மீதி பணத்தை கொடுங்கள் 15 நாட்களுக்குள் வேலையை முடித்து தருவதாக சொன்னார். நானும் வந்து விட்டேன். பின்னர் நான் மீண்டும் 10.05.2018-ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் சர்வேயர் கதிரேசனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது வேலை முடிந்ததா என்று கேட்டேன். அப்போது அவர் வரைப்படத்தில் சந்தேகம் உள்ளது என்று சொன்னார், நான் உடனே அவரிடம் நேரில் வருகிறேன் என்று சொல்லி விட்டேன். பின்னர் நான் கிளம்பி சுமார் மதியம் 2 மணிக்கு சூலூர் தாலுக்கா அலுவலகம் சென்று கதிரேசன் அவர்களை போய் பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் வரைபடத்தை காண்பித்து சில இடங்களை குறிப்பிட்டு அந்த இடத்தை என்னையே அளந்து வருமாறும், மேலும் அவர் ஏற்கனவே என்னிடம் கேட்ட பணம் போதாது என்றும் தனக்கு மட்டும் தனியாக ரூ.15,000/- வேண்டும் என்றும் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.25,000/- வேண்டும் என்றும் கேட்டார். நான் கொஞ்சம் கம்மி பண்ணுங்கள் என்று சொன்னேன். அப்போது அவர் என்னிடம் ரூ.5000/- குறைத்து கொண்டு ரூ.20,000/- கொடு என்றும் பணம் கொடுத்தால் தான் இந்த வேலையை முடித்து தருவதாகவும் சொன்னார். மேலும் அவர் 12.05.2018-ம் தேதி சனிக்கிழமை அய்யம்பாளையத்திற்கு அருகில் வருவதாகவும் அங்கு தன்னிடம் வந்து வரைப்படத்தையும், பணத்தையும் தருமாறு சொன்னார். அதன் பின்பு 12.05.2018-ம் தேதி சனிக்கிழமை சர்வேயர் கதிரேசனுக்கு போன் செய்த போது அவர் தான் அய்யம்பாளையத்தில் இருந்து செஞ்சேரிபுத்தூர் போகும் வழியில் நிலத்தை அளந்து கொண்டிருப்பதாகவும் அங்கு வருமாறு சொன்னார். நானும் அங்கு சென்று நான் எனது மாமனார் இடத்தை அளந்து வரைந்த வரைப்படத்தை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கிக் கொண்டு என்ன வரைப்படத்தை மட்டும் கொடுக்கிறீங்க பணம் ரூ.20,000/- என்னாச்சு என்று கேட்டார். நான் ஏற்கனவே ரூ.10,000/- கொடுத்துள்ளேன் என்றும் எனது வேலையை முடித்து கொடுங்கள் மீதி தருகிறேன் என்று சொன்னதற்கு, அவர் உடனே என்னிடம் நான் வரைந்த வரைப்படத்தை திருப்பி தந்து விட்டார். பின்னர் நான் அவரிடம் பணத்தை ஏற்பாடு செய்து

தருகிறேன் என்று சொன்னதற்கு பணம் ரூ.20,000/- தந்தால் தான் நான் உட்பிரிவு செய்து தருவேன். அதன் பின்பு தான் உங்களுக்கு தனிப்பட்டா கிடைக்கும் என்று சொல்லி என்னிடம் இருந்த வரைபடத்தை மீண்டும் வாங்கிக் கொண்டார். பின்னர் நான் மீண்டும் 14.05.2018-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சூலூர் தாலுக்கா அலுவலகம் சென்று சர்வேயர் கதிரேசன் அவர்களை பார்த்தேன். அப்போது அலுவலகத்தில் நிறைய நபர்கள் இருந்ததால் என்னிடம் ஏதும் பேசவில்லை, போனில் பேசுமாறு சொல்லி அனுப்பி விட்டார். பின்னர் அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் அவரது தொலைபேசி எண்.9486588101 என்ற எண்ணிற்கு பேசிய போது அவர் என்னிடம் சிக்னல் கிடைக்கவில்லையென்றும் சிறிது நேரம் கழித்து பேசுமாறு சொன்னார். அதன்படி நான் மீண்டும் இரவு சுமார் 8 மணிக்கு மீண்டும் கதிரேசன் எண்ணிற்கு (9486588101) போன் செய்து சுமார் 20 நிமிடம் பேசினேன். அப்போது அவர் மேற்கொண்டு தான் கேட்ட பணம் கொடுத்தால் தான் உனது வேலையை முடித்து தருவேன் என்றும் இதற்கு மேல் விளக்கி சொல்ல முடியாது என்றும் சொன்னார். நான் அவரிடம் ஏற்கனவே ரூ.10,000/- கொடுத்துள்ளேன் என்று சொன்ன போது அவர் மேற்கொண்டு பணம் கொடுக்க முடியாது என்றால் நீங்கள் என்னிடம் தந்த ரூ.10,000-ஐ திரும்ப கொடுத்து விடுகிறேன், இந்த மாத கடைசியில் நானே உங்களை அழைக்கிறேன், அப்போது வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்றும், வேறு யாரிடமாவது இந்த வேலையை முடித்து கொள்ளுமாறும் சொன்னார். இதை விட யாரும் குறைத்து செய்ய மாட்டார்கள் என்றும் சொன்னார். நான் அவரிடம் வேலையை முடித்து விடுங்கள் பணத்தை கொடுக்கிறேன் என்று சொன்னதற்கு, அதற்கு அவர் என்னிடம் வேலையை முடித்த பிறகு தான் பணம் தருவதாக சொல்கிறாயா, அதெல்லாம் முடியாது, நீங்க கொடுப்பீங்கன்னு காத்திகிட்டு இருக்கிறதா? என்றும் இந்த விசயமெல்லாம் கண்ணும் காதும் வெச்ச மாதிரி இருக்கனும், நான் ஏமாத்த மாட்டேன் என்றும் சொன்னார். நான் அவரிடம் நீங்கள் ரூ.30,000/-ம் என்னிடம் கேட்டீர்கள், நான் ஏற்கனவே ரூ.10,000/- கொடுத்து விட்டேன் என்றும், நாளை ரூ.10,000/- தருகிறேன் என்றும், மீதி ரூ.10,000/- வேலை முடித்த பிறகு தருகிறேன் என்று சொன்னேன். நான் எவ்வளவோ சொல்லி பார்த்தேன், அதற்கு அவர் அப்படி எல்லாம் விட முடியாது என்றும் மீதி பணம் ரூ.20,000/- கொடுத்தால் தான் வேலையை முடித்து தருவதாக சொன்னார். மேலும் எனக்கும் அவருக்கும் நடந்த இந்த உரையாடலை எனது தொலைபேசியில் பதிவு செய்து வைத்துள்ளேன். நான் யோசித்து பார்த்ததில் பணம் ரூ.20,000-ஐ சர்வேயர் கதிரேசனுக்கு லஞ்சமாக கொடுத்து எனது மாமனார் திரு.திருமலைசாமி கவுண்டர் அவர்களது பெயரில் உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற விருப்பம் இல்லை என்று முடிவு செய்தேன். எனவே என்னிடம் உட்பிரிவு செய்து பட்டா பெற்று தருவது சம்மந்தமான வேலையை முடித்து தர ரூ.20,000/- லஞ்சம் கேட்ட நில அளவையர் திரு.கதிரேசன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒம்/-- XXXXX(V.மந்திரமூர்த்தி) Sir, Received the complaint on 15.05.2018 at 14.00 hrs. Sd/- (xxxx) 15.05.2018 Inspector of Police, V&AC,Coimbatore. Sir, The complaint was sent to DVAC by

5

and seeking a Preliminary Enquiry. Sd/- (xxxx) 15/05/2018 Inspector of Police, V&AC, Coimbatore . Sir, After receiving permission from the Director of Vigilance and Anti-Corruption, a preliminary enquiry was registered in PE 139/2018/REV/CB on 15.05.2018 at 17.30 hrs and a preliminary verification of the complaint was conducted. Sd/- (xxxx) 15.05.2018 Inspector of Police, V&AC,Coimbatore. Sir, During verification, the conversation between the complainant Tr.V.Mandiramoorthy and the accused Tr.Kathiresan was recorded on 16.05.2018 between 11.02 hrs and 11.34 hrs at Sulur Taluk Office, Coimbatore District in the voice recording device. The said conversation when heard confirmed the demand of illegal gratification of Rs.20,000/- by Tr.Kathiresan, Surveyor and thereby a prima facie offence was made out. After getting oral permission from the DVAC, a case in Coimbatore V&AC Cr.No 4/2018/AC/CB u/s 7 of PC Act 1988 was registered on 16.05.2018 at 16.30 hrs and took up investigation. Sd/- (xxxx) 16.05.2018 Inspector of Police, V&AC, Coimbatore. அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கோவை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

16/5/18
(ப.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.பிரிவு கோயம்புத்தூர்.

Sir,
இதில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு மற்றும் அதற்குண்டான சான்றிதழ் u/s 65(B)(4)(c) of Indian Evidence Act 1872 ஆகியவற்றையும், சிறப்பு நீதிமன்ற நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோவை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

16/5/18.
Inspector of police
V&AC Cbe.

Scanned by CamScanner